## காரைநகர் பிரதேச சபை

## யாழ்ப்பாணம் மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 26 பெப்ரவரி 2020 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 29 யூன் 2020 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 24 ஆகஸ்ட் 2020 ஆந் திகதியும் தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து காரைநகர் பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 03 மயானங்களின் பெறுமதிகள் கணிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுகளில் சேர்க்கப்பட்டிருக்காததுடன் மயானம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ரூபா 2,128,132 இனை நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டிருக்கவில்லை இதனால் சொத்தின் பெறுமதி நிதிக்கூற்றுகளில் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | 03 மயானங்களின் பெறுமதிகள் கணக்கிற்கு சேர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | 03 மயானங்களின் பெறுமதிகள் கணிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுகளில் சேர்க்கப்பட வேண்டும். |

**1.4 இணக்கமின்மைகள்**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டின் 19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் | | | |
| | உப பிரிவு 16(2) | சபையினால் வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | திறைசேரி சுற்றுநிருபம் மூலம் காலநீடிப்பு வழங்கப்பட்டுள்ளதற்கு அமைய வருடாந்த செயலாற்றுகை அறிக்கை சமர்ப்பிக்கப்படுகின்றது. | உரிய சட்டத்திற்கமைய செயலாற்றல் அறிக்கை உரியகாலத்தில் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும் |
| (ஆ) | 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி நிருவாக விதி | | | |
| | அத்தியாயம் III பிரிவு 32 | சபையினால் இதுவரை ஆதனவரி மதிப்பீடுகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை . | மதிப்பீட்டு வேலைகளை விரைவுபடுத்த தொடர் செயற்பாடுகள் சபையால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. | உரிய காலத்தினுள் ஆதனவரி அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | |
| | நிதிப்பிரமாணம் 371 | சபையினால் வழங்கப்பட்ட ரூபா 29,440 முற்பணங்கள் இதுவரை தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | சீர்செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது . | தீர்வு செய்யப்படாத முற்பணங்கள் தொடர்பாக நிதிபிரமானத்திற்கு அமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கை | | | |
| 2018 ஜனவரி 24 ஆம் திகதிய இல 05/2018(1)ஐ கொண்ட சுற்றறிக்கையினால் திருத்தப்பட்ட 2008 பெப்ரவரி 06 ஆம் திகதிய இல 05/2008 | பிரசைகள்/பயனாளிகள் சமவாயத்திற்கு ஏற்புடையதாக பொதுமக்கள் சேவைப்பட்டயம் தயாரிக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பொதுமக்கள் சேவைப்பட்டயம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது | சுற்றுநிருபத்திற்கு அமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (உ) ஏனைய சுற்றறிக்கை | | | |
| 2018.07.19 ஆம் திகதிய 2018/e உள்ளூராட்சி - 01 ஆம் இலக்க உள்ளூராட்சி சுற்றுநிருபம் | பிரசைகளுக்கு இணையத்தின் மூலமாக சேவைகளை பெறுவதற்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. | எமது சபை மிகவும் வருமானம் குறைந்த சபையாக இருப்பதனால் தற்போது இணைய வசதிகளை பொதுமக்களிற்கு வழங்க முடியாதுள்ளது. | சுற்றறிக்கைக்கு அமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.4.2 வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 154 ஆம் பிரிவின் பிரகாரம், குறித்த சில காணிகள் விற்பனை மீது 1% விற்பனை வரி அறவிடப்பட வேண்டிய போதிலும், சபையினால் அவற்றினை அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இதுவரை எமது சபை எல்லைக்குள் ஏலவிற்பனைகள் இடம்பெறவில்லை. | பிரதேச சபை அதிகாரச் சட்டத்திற்கமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,836,824 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,934,011 தொகையாக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2019 | | 2018 | |
|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 3,510,000 | 5,994.360 | 10,000 | 10,060 |
| வாடகைகள் | 1,878.000 | 1,730,640 | 2,202,200 | 2,024,131 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 291,220 | 402,663 | 269,975 | 328,170 |
| ஏனைய வருமானம் | 29,515,689 | 29,751,375 | 29,638,381 | 33,331,107 |
| | 35,194,909 | 37,879,038 | 32,120,556 | 35,693,468 |

### 2.2.2 வீதவரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 05 மயானங்களிற்கு சபையினால் அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் மயானங்களில் உடலை தகனம் செய்வதற்கான அனுமதி பெறப்பட்டு தகனம் செய்யப்பட்டிருக்காததுடன் அதற்கான வரியும் சபையினால் அறவிடப்பட்டிருக்கவில்லை. | மயானங்களிற்கான அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டதும் வரி அறவீட்டுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | மயான வரி உரிய காலத்தில் அறவிடப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், 30 முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் உருவாக்கப்பட்டிருந்த போதும் அனைத்து விடயங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அனைத்து விடயங்களிற்கும் உபவிதிகள் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சட்டத்திற்கமைய உருவாக்கப்பட்ட உபவிதிகள் தொடர்பாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய 30 செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டுக்கான செயல் நடவடிக்கைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. | உபவிதிக்கமைய உரிய செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**(இ) எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளினை அடைவதற்கு தவறியமை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செயல் நடவடிக்கைத் திட்டத்தில் கசூரினா கடற்கரையினை அழகுபடுத்தலும் பாரம்பரிய உணவகம், மலசலகூடம் மற்றும் சிறுவர் பூங்கா அமைத்தலும் செயலாற்றலுக்கு ரூபா 15,827,506 இனை செலவிடப்பட்டதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட வெளியீடு அடைந்து கொள்ளப்பட்டிருந்த போதிலும், எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளினை அடைந்து கொள்ள முடியாதிருந்தது. | 2020 வருட ஆரம்பத்தில் பெண் தலைமைத்துவ குடும்பங்களிற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும் தற்போது குறித்த செயற்பாடுகள் நிறுத்தப்பட்டுள்ளன. | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஒரு செயற்பாட்டின் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளினை அடைந்து கொள்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | உள;@ராட்சி உதவியாளரினால் தயாரிக்கப்பட வேண்டிய அறிக்கைகள் உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாமையினால் பிரதேசசபைக்குரிய முக்கிய பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | இனிவரும் காலங்களில் உரிய காலப்பகுதியில் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படும். | உள்@ராட்சி உதவியாளரினால் தயாரிக்கப்பட வேண்டிய அறிக்கைகள் உரிய காலத்தில் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பிரதேச சபையானது பொதுமக்கள் சேவை பட்டயத்தினை காட்சிப்படுத்தியுள்ள போதும் அதில் குறிப்பிடப்பட்டதற்கு முரணாக மக்களுக்கு வழங்கப்பட்ட சேவைகள் காலம் தாழ்த்தியே வழங்கப்பட்டிருந்தது. | சில நேரங்களில் தாமதம் ஏற்பட்டுள்ளது. | பொதுமக்களிற்கான சேவையினை உரிய காலத்தில் வழங்கப்படுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையானது குறித்த பதவியினர்களின் 06 வெற்றிடங்களினை நிரப்புவதற்கு உரிய காலப்பகுதியில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வேலைத் தொழிலாளிக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உரியகாலத்தினுள் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் குறித்த நிதியாண்டில் நிறைவேற்ற ண்டிய அபிவிருத்தி வேலைகள் நிறைவு செய்யப்படாமல் ரூபா 1,416,545 ஆன சில்லறை கடன் வழங்குநர் கணக்கில் ஒதுக்கப்பட்டிருந்தது. | சில்றைக்கடன் வழங்குனர் கணக்கு மீதியில் ரூபா 1,416,545 ஆன தொகை அறவிட வேண்டியுள்ளது. | அபிவிருத்தி வேலைகள் உரிய காலத்தில் நிறைவேற்றப்படல் வேண்டும். |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.5.1 பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபையினால் பயன்படுத்தப்பட்ட வாகனமானது கடந்த 2012 ஆம் ஆண்டு தொடக்கம் திருத்தம் மேற்கொள்ள வேண்டிய நிலையில் இருந்த போதும் அதனை திருத்துவதற்கு சபையினால் உரிய நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இவ்வாகனம் விற்பனை செய்வதற்கு அல்லது வேறு திணைக்களங்களிற்கு கையளிப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | வாகனங்களை உரிய காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.6 பெறுகை

#### 3.6.1 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சபையினால் சேவைகளுக்காக பெறுகை திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டு சேவைகளுக்குமான பெறுகைத் திட்டம் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | பிரதேச சபையினால் சேவைகளுக்காக பெறுகை திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். |